| நோய்களின் பெயர் | கட்டுப்படுத்தும் முறை |
| --- | --- |
| குலை நோய் (*பைரிகுலேரியா கிரைஸியே*) | • கீழ்கண்ட ஏதேனும் ஒரு பூசணக் கொல்லியைத் ஒரு ஹெக்டேர் தெளிக்கவும் ஏடிபென்பாஸ் 500 மிலி (அ) கார்பென்டசின் 250 கி (அ) ஐ.பி.பி 500 மிலி. முதல் தெளிப்பு நோய் அறிகுறிகள் தெரிந்தவுடன் தெளிக்க வேண்டும்.<br>• இரண்டாவது, மூன்றாவது தெளிப்புகள் கதிர் வெளிவரும்போது 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். இவைகள் கதிர் மற்றும் விரல் குலை நோயைக் கட்டுப்படுத்தும்.<br>• *சூடோமோனாஸ் புளோரசன்ஸ்* (10 கிராம் , கிலோ) யை கொண்டு விதை நேர்த்தி செய்யவும். பின்பு பயிரில் சீமை கருவேல் இலைச்சாறு (*புரோசோ பிஸ் ஜீலிபுளோரா*) 10 சதம் மற்றும் நெய்வேலி காட்டாமணக்கு இலைச்சாறு 10 சதம் கொண்டு தெளிக்கவும்.<br>• ஆரியோபனஜின்-சால் 100 பிபிம் மருந்தினை 50 சதம் கதிர் வெளிவரும்போது தெளிக்கவேண்டும். இரண்டாவதாக மேன்கோசெப் 1000 கிராம் (ஹெக்டருக்கு) மருந்தினை 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். |
| **தேமல் நோய்**<br>கேழ்வரகு பச்சை கலந்த மஞ்சள் கோடு நோய் (ரேப்டோ வைரஸ்)<br>**நோய் பரப்பும் காரணி**<br>தத்துப்பூச்சி (*சிக்கடுல்லினா பைபங்டேட்டா*) | • பாதிக்கப்பட்ட பயிர்களை பிடுங்கி அப்புறப்படுத்துதல்<br>• மோனோகுரோட்டோபாஸ் (36 டிபுள்யு எஸ்.சி) 700 மிலி (அ)<br>• மீதைல் டெமட்டான் (25 இசி) 500 மி.லி (ஒரு ஹெக்டெருக்கு) நோய் அறிகுறிகள் தெரிந்தவுடன் தெளிக்க வேண்டும். மறுபடியும் தேவையானால் 20 நாட்கள் இடைவெளியில் இரண்டு தடவை தெளிக்க வேண்டும். |